**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Case No.** **CC.No.232/2022**

Deposition of **PW–1/LW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சன்னாசி | **Age** | : | 55/2026 |
| **Father's Name** | : | முத்தையா | **Religion** | : | இந்து |
| **Village** | : | மீனாட்சிபுரம் | **Calling** | : | கூலிவேலை |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02/03/2026.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மீனாட்சிபுரத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் காலை 7 மணி அளவில் போடியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு பக்கத்தில் உள்ள ஏ.டி.எம்.–க்கு சென்று பணம் எடுப்பதற்காக சென்றேன். அப்போது ஒரு நபர் பணம் எடுப்பதற்காக ஏ.டி.எம்.–க்கு வந்தார். எனக்கு பணம் எடுக்க தெரியாததால் அந்த நபரிடம் எனது ஏ.டி.எம். கார்டை கொடுத்து பணம் எடுத்து தருமாறு கேட்டேன். அவர் எனது கார்டை ஏ.டி.எம். மிஷினில் கொடுத்துவிட்டு பணம் இல்லை என்று என்னிடம் கார்டை திருப்பிக் கொடுத்து விட்டார். அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்ற போது எனது செல்போனுக்கு குறுஞ்செய்தி வந்தது. அதில் ரூ.10,000/–த்தை எடுத்ததாக செய்தி வந்தது. நான் மீண்டும் ஏடிஎம் சென்டருக்கு சென்று பார்த்தபோது அந்த நபர் அங்கு காணவில்லை.

2) அதன்பிறகு நான் போடி நகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது.

அந்த புகார் நான் கொடுத்தது தான். **(புகார் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

3) அதன்பிறகு நீதிமன்றத்தில் மனு செய்து ரூபாய் 3 ஆயிரம் பணத்தை எனது இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றேன்.

**<u>அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .</u>**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4) கடந்த 01/05/2019 ஆம் தேதி காலை 7:20 மணிக்கு போடியில் உள்ள கால்நடை மருத்துவமனை எதிரில் உள்ள எஸ்.பி.ஐ. ஏ.டி.எம்.–க்கு பணம் எடுக்க சென்றேன் என்றும், அங்கு எனக்கு பணம் எடுக்கத் தெரியாததால் பக்கத்தில் நின்று கொண்டு இருந்த எனக்கு அறிமுகமான ஈஸ்வரன் என்பவரிடம் எனது ஏ.டி.எம். கார்டை கொடுத்து பணம் எடுக்க சொன்னேன் என்றும், அவர் ஏ.டி.எம். கார்டை ஏ.டி.எம் மிஷினில் போட்டுவிட்டு பணம் வரவில்லை என்று கார்டை மட்டும் திருப்பி கொடுத்தார் என்றும், நான் வீட்டிற்கு சென்ற போது எனது செல் நம்பருக்கு ரூ.8000 பணத்தை எடுத்ததாக குறுஞ்செய்தி வந்தது என்றும், நான் உடனே ஏ.டி.எம்.–க்கு சென்று பார்த்தபோது ஈஸ்வரன் அங்கு இல்லை என்றும், அதன் பின்பு நான் எனது வங்கியில் கணக்கை பார்த்தபோது ரூ.8000/– பணம் எடுக்கப்பட்ட விபரம் தெரிய வந்தது என்றும், அதன் பின்பு ஈஸ்வரனை விசாரித்தேன் என்றும், அவர் ரூ.8000/– பணத்தை எடுத்ததாகவும், சில நாட்களில் கொடுத்து விடுவதாகவும் பொதுமக்கள் முன்னிலையில் என்னிடம் கூறியதால் நான் அவர் மீது உடனே புகார் கொடுக்கவில்லை என்றும், அதன் பின்பு அவர் பணத்தை தர காலதாமதம் செய்ததால் 07/07/2019 ஆம் தேதி அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி போடி நகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம்

எதிரியை தெரியாது என்று உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும், குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.02 18:24:48 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**